






தொகுப்பு


**பாபு மனோ**


# வரலாற்றில் குரங்கணில் முட்டம்


வெளியீடு

திருவண்ணாமலை மாவட்ட
வரலாற்று ஆய்வு நடுவம்

# உள்ளடக்கம்



1. அமைவிடம்
2. பெயர்க் காரணம் :
3. வரைபடம்
4. திருஞானசம்பந்தர் திருப்பதிக வரலாறு
5. திருக்குரங்கணில்முட்டம் பாடல்கள்
6. கல்மண்டகத்து ஆழ்வார் – குடைவரைக் கோயில்
7. கல்வெட்டு செய்திகள்
8. கொய்யாமலர் நாதர் கோயில் கல்வெட்டுகள்



# அறிமுகம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் வெம்பாக்கம் வட்டத்தில் உள்ள சிறிய கிராமம், தொன்மைமிகு கிராமமான குரங்கணில் முட்டம் குறித்து அவ்வூரில் உள்ள இரண்டு கோயில்களையும் ஆய்வு செய்து ஊர் தகவலுடன் தேவாரப் பதிகத்துடன் ஊர் வரலாறு நூல் எழுதியுள்ளார். இந்நூலில் குரங்கணில்முட்டத்து குடைவரை பற்றிய முழுதகவலும் விளக்கத்துடன் இயல்பான நடையில் எழுதியுள்ளார். வழிகாட்டி புத்தகம் போல அனைவருக்கும் பயன்படக்கூடிய இப்புத்தகத்தை எழுதிய ஆசிரியர் பாபுமனோ அவர்களுக்கு பாராட்டுகள்.
திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் ஊர் வரலாறு நூலாக்க திட்டத்தின்கீழ் இந்நூலை வெளியிடுவதில் நடுவம் பெருமை கொள்கிறது.

.

**ச. பாலமுருகன்**
செயலாளர்
திருவண்ணாமலை மாவட்ட
வரலாற்று ஆய்வு நடுவம்.



# ஆசிரியர் உரை

தமிழ்நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள பெரிதும் உதவியாக இருப்பவை, தொல்லியலாகட்டும், கோயில், கல்வெட்டுகள், நடுகல் மற்றும் பல. அவ்வகையில் திருவண்ணாமலை மாவட்டம் சமூக வரலாறு, கலை வரலாறு, அரசியல் வரலாறு, பெருமளவில் கொண்டு தகவல் களஞ்சியமாக, பல்வேறு தகவல்களை அளித்து கொண்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் ஒவ்வொரு ஊரிலும் இருக்கும் வரலாற்று தகவல்களை சேகரித்து, இம்மாவட்டத்தின் வரலாற்றையும், தொல்லியல் சின்னங்களையும், வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களை கண்டறிந்தும் அவற்றை ஆவணப் படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள திருவண்ணாமலை வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயல் போற்றத்தக்கது.

காஞ்சிபுரத்தின் அருகே உள்ள குரங்கணில் முட்டம் தமிழக கோயில் வரலாற்றின் முன்னோடியாக திகழும் பல்லவர்களின் குடைவரையை தன்னகத்தே கொண்டுள்ளது. இக் குடைவரையை மற்றும் பாடல் பெற்ற கோயிலை பற்றி நூலாக்கம் செய்வதற்கும், வெளிவர காரணமாயிருந்த உயர்திரு. பாலமுருகன் அவர்களுக்கும், வரலாற்று, சமய தகவல்களை எனக்கு அளித்து கொண்டிருக்கும் திருமதி.சௌந்தரி ராஜ்குமார் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் அனைவரும் படித்து பயன்பெறும் வகையில் எளிய நடையில் எழுதப்பட்டு மாணவர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

– பாபு மனோ,
காஞ்சிபுரம்.



# வரலாற்றில் குரங்கணில்முட்டம்

## 1. அமைவிடம்

குரங்கணில்முட்டம் ஊரானது திருவண்ணாமலை மாவட்டத்தின், வெம் பாக்கம் வட்டத்தில் உள்ளது. காஞ்சிபுரம் – வந்தவாசி பேருந்து சாலையில் காஞ்சிபுரத்திலிருந்து சுமார் 11 கி.மி. தொலைவில் இத்திருத்தலம் உள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து பயணம் செய்யும் போது பாலாற்றைக் கடந்தால் சுமார் 9 கி.மீ. தொலைவில் தூசி என்ற கிராமத்தை அடைந்து, அங்கிருந்து பிரியும் குரங்கணில்முட்டம் பாதையில் 2 கி.மீ. சென்றால் இக்கிராமத்தை அடை யளாம், இவ்வூர் பல்லவர் காலத்தில் சிறப்புற இருந்திருக்க வேண்டும் அதற்கு சான்றாக ஒரு பாடல் பெற்ற கோயிலும், செங்கல், சுதை, மரத்தால் கோயில் கள் கட்டப்பட்டிருந்த காலத்தில், தமிழக கோயில் கட்டடக் கலை வரலாற்றில் பல புதுமைகளை புகுத்தி பல்வேறு சிறப்புகளை அமைத்த பெருமை பல்லவர் களையே சாரும் என்றால் அது மிகையாகாது. அவ்வகையில் பல்வேறு கலை களை கற்றுத் தேர்ந்தவனும், விசித்திரசித்தனுமாகிய முதலாம் மகேந்திர வர்மன் எடுப்பித்ததாக கருதப்படும் எழிலார்ந்த பல்லவர் பாணியில் அமைக் கப்பட்ட குடைவரையும் உள்ளது, அப்போது இவ்வூர் பல்லவபுரம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

## 2. பெயர்க் காரணம் :

வாலி குரங்கு உருவிலும் இந்திரன் அணில் உருவிலும் எமன் காகம் ( முட்டம் ) உருவிலும் இத்தலத்தில் இறைவனை தனித்தனியே வழிபட்டதால் இவ்வூர் குரங்கணில்முட்டம் என்ற பெயரைப் பெற்றது.

இறைவர் : வாலீசுவரர், கொய்யாமலைநாதர்
இறைவியார் : இறையார் வளையம்மை
தேவாரப் பாடல்கள் : சம்பந்தர் – விழுநீர்மழு வாள்படை.


இறைவனை வழிபடும் நிலையில் இம்மூன்றின் உருவங்களும் புடைப்புச் சிற்பமாக ஆலய வாயிலில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. வாலி முதலிலும், பிறகு இந்திரனும், பின்பு எமனும் இத்தலத்தில் இறைவனை வழிபட்டுள்ளனர். இறைவன் சிறிய இலிங்க உருவில் மேற்குப் பார்த்த சந்நிதியில் அருட்காட்சி தருகிறார். கருவறையும் மிகச் சிறியதாக உள்ளது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி அமைந்திருக்கிறது. இத்தலத்தின் தல விருட்சம் இலந்தை மரம். தீர்த்தம் காக்கை தீர்த்தம் (காக்கை மடு). இது எமன் சிவபூசை செய்வதற்காக காக்கை உருவில் இருந்தபோது தன் அலகினால் பூமியைக் குத்தி உண் டாக்கிய மடு என்பது ஐதீகம். தற்போது இக்கோயில் திருவாலீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படுகிறது.

கல்வெட்டில் இத்திருத்தலம், 'காலியூர்க் கோட்டத்து இருகழி நாட்டு மாமண்டூர்ப் பற்றத்துப் பல்லவபுரம் ஆன குரங்கணில் முட்டம்" என்றும், இறைவன், "திருக்குரங்கணில் முட்டம் உடைய நாயனார்" என்றும் 'கொய்யா மலர் ஈசுவர தேவர்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தலத்தைப் பற்றி 6 கல்வெட்டுகள் உள்ளன. அவை கோநேரின்மை கொண்டான், குலோத்துங்கன், இராஷ்டிரகூட கன்னரதேவன், கிருஷ்ண தேவராயர் இவர்கள் காலத்தன. பூஜா விருத்திக்காகச் சகம் 1451இல் கிருஷ்ணதேவ மகாராயர் பல்லவபுரம் கிராமத்தை அளித்தார். இராஷ்டிரகூட கன்னரதேவன் ஸ்ரீ பலி பூஜைக்காக நிலம் அளித்தான். சம்புவராயரால் சத்தி மங்கலமாகிற அம்மநல்லூர் கிராமத்தை நிவந்தமாகவிட நீறணிந்தான் சேது ராயனுக்கு உத்தரவிட்டான்.

காலை 7 மணி முதல் 10 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் திறந்திருக்கும். இக்கோயிலை நிர்வகிக்கும் அர்ச்சகரின் வீடு இதன் அருகிலேயே உள்ளது.

## வரைபடம்



திருக்கோயில் அமைப்பு: மதிற்சுவருடன் கூடிய ஒரு முகப்பு வாயிலுடன் ஆலயம் அமைந்திருக்கிறது. வாயிலைக் கடந்தவுடன் பலிபீடமும், நந்தி மண்டபமும் உள்ளது. வெளிப் பிராகாரத்தில் சந்நிதிகள் ஏதுமில்லை. உள்வாயிலைக் கடந்து சென்றால் நேரே மூலவர் வாலீசுவரர் சந்நிதி உள்ளது. இறைவன் ஸ்யம்புலிங்கமாக மேற்கு நோக்கி காட்சியளிக்கிறார். கருவறை பாத பந்த அதிட்டானத்துடன், சுவர் பகுதியில் பிரம்ம காந்த தூண்களுடன் கட்டப்பட்டுள்ளது. உள்பிராகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், காசிவிசுவ நாதர், பைரவர், சூரியன், நவக்கிரகம், துர்க்கை, சப்தமாதர்கள், நால்வர் ஆகி யோரின் சந்நிதிகள் உள்ளன. சித்திரை மாதத்தில் குறிப்பிட்ட சில நாட்களில் ஸ்வாமி மீது சூரிய ஒளி விழுகிறது என்பது இத்தலத்தின் மற்றொரு சிறப் பம்சம்.

வள்ளல் பெருமான் தாம் பாடியருளிய விண்ணப்பக் கலிவெண்பாவில், "முச்சகமும் ஆயும் குரங்கணில் முட்டப் பெயர் கொண்டு, ஓங்கு புகழ் ஏயும் தலம் வாழ் இயல்மொழியே" என்று பாடியுள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருமான் பாடி அருளிய ஒரு திருப்பதிகம் உள்ளது.

## திருஞானசம்பந்தர் திருப்பதிக வரலாறு


திருஞானசம்பந்தர்

**பெரிய புராணப் பாடல் எண் : 984**

அங்கண் அமரர் பெருமானைப்
பணிந்து போந்து, ஆடுஅரவினுடன்
பொங்கு கங்கை முடிக்குஅணிந்தார்
மகிழும் பதிகள் பலபோற்றி,
மங்கை பாகர் அமர்ந்துஅருளும்
வயல்மா கறலை வழுத்திப்போய்,
கொங்கு மலர்நீர்க் குரங்கணில்முட்
டத்தைச் சென்று குறுகினார்.

## பொழிப்புரை :

திருவோத்தூரில் திருக்கோயில் கொண்டுள்ள தேவதேவரான இறை வரை வணங்கிச் சென்று, ஆடும் பாம்புடன் பெருகும் நீரையுடைய கங்கையை முடியில் சூடிய இறைவர் மகிழும் பதிகள் பலவற்றையும் போற்றி, உமையம் மையை ஒரு கூற்றில் கொண்ட இறைவர் வீற்றிருக்கும் வயல்கள் சூழ்ந்த திருமாகறலைப் போற்றிச் சென்று, மணம் கமழும் மலர்களையுடைய நீர் சூழ்ந்த திருக்குரங்கணில்முட்டத்தின் அருகில் செல்வாராயினர்.

**பெரிய புராணப் பாடல் எண் : 985**

ஆதி முதல்வர் குரங்கணில்முட்
டத்தை அணைந்து, பணிந்து,ஏத்தி
நீதி வழுவாத் திருத்தொண்டர்
போற்ற, நிகரில் சண்பையினில்

வேத மோடு சைவநெறி
விளங்க வந்த கவுணியனார்,
மாதொர் பாகர் தாம்மன்னும்
மதில்சூழ் காஞ்சி மருங்குஅணைந்தார்.

**பொழிப்புரை :** ஆதிமுதல்வரான சிவபெருமானின் திருக்குரங்கணில் முட்டத்தைச் சேர்ந்து வணங்கிப் போற்றிச் சைவநெறியில் வழுவாத ஒழுக்க முடைய திருத்தொண்டர் போற்றச் சென்று, ஒப்பில்லாத சீகாழிப் பதியில் மறை நெறியுடனே சைவநெறியும் விளங்குமாறு தோன்றியருளிய கவுணியரான ஞானசம்பந்தர், உமையம்மையை ஒரு கூற்றில் கொண்ட ஏகம்பவாணர் நிலை யாக எழுந் தருளியுள்ள மதில் சூழ்ந்த காஞ்சிப் பதியின் அருகில் அடைந்தார்.

**குறிப்புரை :** முட்டம் – காகம். குரங்கு, அணில், காகம் ஆகிய மூன்றும் வழிபட்ட திருப்பதியாதலின் இப்பெயர் பெற்றது. இப்பதியில் அருளிய பதிகம் 'விழுநீர்' ( தி.1 ப.31 ) எனத் தொடங்கும் தக்கராகப் பண்ணிலமைந்த பதிக மாகும்.

## திருக்குரங்கணில்முட்டம்

### பண் – தக்கராகம்

**பாடல் எண் : 1**

விழுநீர் மழுவாள் படைஅண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
தொழுநீர் மையர், தீது உறுதுன்பம் இலரே.

**பொழிப்புரை :** பெருமைக்குரிய கங்கையை முடிமிசை அணிந்த வரும், மழு வாட்படையைக் கையில் ஏந்தியவரும் ஆகிய சிவபிரான் உறைவது கழுநீர், குவளை ஆகியன மலர்ந்து, கயல்மீன்கள் துள்ளுமாறு விளங்கும் நீர் நிலை களை உடையதும், செழுமையான வயல்களால் சூழப்பட்டதுமாகிய திருக் குரங்கணில்முட்டம் ஆகும். இத்தலத்தைத் தொழுபவர் தீமையால் வரும் துன்பம் இலராவர்.

**பாடல் எண் : 2**

விடைசேர் கொடிஅண் ணல்விளங்கு உயர்மாடக்
கடைசேர் கருமென் குளத்துஓங் கியகாட்டில்
குடைஆர் புனன்மல்கு குரங் கணின்முட்டம்
உடையா ன்எனைஆள் உடைஎந் தைபிரானே.

**பொழிப்புரை :** உயர்ந்து விளங்கும் மாடங்களின் கடை வாயிலைச் சேர்ந் துள்ள கரிய மெல்லிய காட்டிடையே அமைந்த குடைந்து ஆடுதற்குரிய நீர் நிலைகள் நிறைந்த குரங்கணில்முட்டத்தை உடையானும் விடைக்கொடி அண்ணலுமாகிய சிவபிரான் என்னை ஆளாக உடைய தலைவன் ஆவான்.










பூமிதேசம்?
கபோதம்
வாஜனம்
உத்திரம்
பட்டிகை
கண்டம்
குமுதம்
ஜகதி
உபானம்



**பாடல் எண் : 3**

சூலப் படையான், விடையான், சுடுநீற்றான்,
காலன் தனைஆர் உயிர்வவ் வியகாலன்,
கோலப் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டத்து
ஏலம் கமழ்புன் சடை,எந் தைபிரானே.

**பொழிப்புரை :** அழகிய சோலைகளால் சூழப்பெற்ற குரங்கணில் முட்டத்தில் எழுந்தருளிய மணம்கமழும் சடைமுடியை உடையோனாகிய எந்தை பிரான் சூலப்படையையும் விடை ஊர்தியையும் உடையவன். திருவெண்ணீறு பூசியவன். காலனின் உயிரை வவ்வியதால் கால காலன் எனப்படுபவன்.

**பாடல் எண் : 4**

வாடா விரிகொன் றைவலத்து ஒருகாதில்
தோடுஆர் குழையான் நலபால் அனநோக்கி
கூடா தனசெய் தகுரங் கணின்முட்டம்
ஆடா வருவார் அவர்அன் புடையாரே.

**பொழிப்புரை :** வாடாது விரிந்துள்ள கொன்றை மாலையைச் சூடிய வனும், வலக் காதில் குழையையும் இடக்காதில் தோட்டையும் அணிந்துள்ளவனும், நன்றாக அனைத்துயிர்களையும் காத்தலைத் திருவுளம் கொண்டு தேவர் எவரும் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்பவனுமாகிய குரங்கணில் முட்டத்துள் திருநடனம் புரியும் இறைவன் எல்லோரிடத்தும் அன்புடையவன்.

**பாடல் எண் : 5**

இறைஆர் வளையா ளையொர்பா கத்துஅடக்கிக்
கறைஆர் மிடற்றான், கரிகீ றியகையான்,
குறைஆர் மதிசூ டிகுரங் கணின்முட்டத்து
உறைவான் எமைஆள் உடைஒண் சுடரானே.

**பொழிப்புரை :** இறையார் வளையாள் என்னும் திருப்பெயர் கொண்ட உமையம்மையை ஒருபாகத்தே கொண்டவனும், நீலகண்டனும், யானையின் தோலை உரித்துப் போர்த்த கையினனும் ஆகிப் பிறைமதியை முடியில் சூடிக் குரங்கணில் முட்டத்தில் உறையும் இறைவன் எம்மை ஆளாக உடைய ஒண் சுடராவான்.

**பாடல் எண் : 6**

பலவும் பயன்உள் என,பற்றும்ஒழிந்தோம்,
கலவும் மயில்கா முறுபே டையொடுஆடிக்
குலவும் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
நிலவும் பெருமான் அடிநித் தல்நினைந்தே.

**பொழிப்புரை :** தோகைகளை உடைய ஆண் மயில்கள் தாம் விரும்பும் பெண் மயில்களோடு கூடிக் களித்தாடும் பொழில்களால் சூழப்பட்ட

குரங்கணில்முட்டத்தில் உறையும் பெருமான் திருவடிகளை நாள்தோறும் நினைந்து உலகப் பொருள்கள் பலவற்றிலும் இருந்த பற்றொழிந்தோம்.

**பாடல் எண் : 7**

மாடார் மலர்க்கொன் றைவளர் சடைவைத்துத்
தோடுஆர் குழைதான் ஒருகா தில்இலங்கக்
கூடார் மதில்எய் துகுரங் கணின்முட்டத்து
ஆடுஆர் அரவம் அரைஆர்த்து அமர்வானே.

**பொழிப்புரை :** சிவபிரான் பொன்னையொத்த கொன்றை மலர் மாலையைச் சடைமீது அணிந்து, காதணியாகிய குழை ஒரு காதில் இலங்கத் திரிபுரத்தை எரித்தழித்து, ஆடும் பாம்பை இடையிலே வரிந்துகட்டிக் குரங்கணில்முட்டத்தில் எழுந்தருளியுள்ளான்.

**பாடல் எண் : 8**

உமையார் நிறமேனி அரக் கர்தம்கோனை
உய்யா வகையால் அடர்த்து,இன் அருள்செய்த
கொய்ஆர் மலர்சூ டிகுரங் கணின்முட்டம்
கையால் தொழுவார் வினைகாண் டல்அரிதே.

**பொழிப்புரை :** கரிய மேனியை உடைய அரக்கர் தலைவனாகிய இராவணனைப் பிழைக்க முடியாதபடி அடர்த்துப் பின் அவனுக்கு இனிய அருளை வழங்கியவனும், அடியவர் கொய்தணிவித்த மலர் மாலைகளுடன் குரங்கணில்முட்டத்தில் எழுந்தருளியுள்ளவனுமாகிய சிவபெருமானைக் கைகளால் தொழுபவர் வினைப்பயன்களைக் காணுதல் இலராவர்.

**பாடல் எண் : 9**

வெறிஆர் மலர்த்தா மரையா னொடுமாலும்
அறியாது அசைந்துஎத் தஓர் ஆரழல்ஆகும்
குறியால் நிமிர்ந்தான் தன்குரங் கணின்முட்டம்
நெறியால் தொழுவார் வினைநிற் ககிலாவே.

**பொழிப்புரை :** மணம் கமழும் தாமரை மலரில் உறையும் நான் முகனும், திருமாலும் அடிமுடி அறிய முடியாது வருந்தி வணங்க அழல் உருவாய் ஓங்கி நின்றருளிய சிவபிரான் விளங்கும் குரங்கணில் முட்டத்தை முறையாக வணங்குவார் வினைகள் இலராவர்.

**பாடல் எண் : 10**

கழுவார் துவரா டைகலந் துமெய்போர்க்கும்
வழுவாச் சமண்சாக் கியர்வாக்கு அவைகொள்ளேல்,
குழுமின் சடைஅண் ணல்குரங் கணின்முட்டத்து
எழில்வெண் பிறையான் அடிசேர் வதுஇயல்பே.

**பொழிப்புரை :** தோய்க்கப்பட்ட துவராடையை உடலிற் போர்த்துத் திரியும் புத்தர், தம்கொள்கையில் வழுவாத சமணர் ஆகியோர் உரைகளைக் கொள் ளாதீர். மின்னல்திரள் போலத் திரண்டு உள்ள சடைமுடியை உடையவனும், அழகிய வெண்பிறையை அணிந்தவனும் ஆகிய குரங்கணில் முட்டத்து இறைவன் திருவடிகளைச் சென்று வணங்குவதே நம் கடமையாகும்.

**பாடல் எண் : 11**

கல்ஆர் மதில்கா ழியுள்ஞான சம்பந்தன்
கொல்ஆர் மழுஏந் திகுரங் கணின்முட்டம்
சொல்லார் தமிழ்மாலை செவிக்கு இனிதாக
வல்லார்க்கு எளிதாம் பிறவா வகைவீடே.

**பொழிப்புரை :** கருங்கல்லால் இயன்ற மதில்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், கையில் கொல்லனது தொழில் நிறைந்த மழுவாயுதம் ஏந்திய குரங்கணில் முட்டத்து இறைவன்மீது பாடிய சொல் மாலையாகிய இத்திருப்பதிகத்தைச் செவிக்கு இனிதாக ஓதி ஏத்த வல்லார்க் குப் பிறவா நெறியாகிய வீடு எளிதாகும்.

## கல்மண்டகத்து ஆழ்வார் – குடைவரைக் கோயில்

குரங்கணில் முட்டத்தில் உள்ள ஒரு குடைவரை பல்லவர் காலத்தில் ஏற் படுத்தப்பட்டதாக இருக்கலாம். அது ஊரின் தரைமட்டத்திலிருந்து ஐந்து அடிக்கும் மேல் கீழே இறங்கி, அங்குள்ள சிறிய குன்று போல் உள்ள பாறையில் கிழக்கு பக்கம் பார்த்து குடையப்பட்டுள்ளது.

இக்குடைவரையிலிருந்து நான்கு கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள் ளன அவற்றில் மூன்று ராஷ்டிரகூட மன்னனான கன்னர தேவனின் ஆட்சி காலத்தில் கொடுக்கப்பட்ட நிவந்தங்களை குறிக்கிறது. அதில் ஒரு கல் வெட்டு இக்குடைவரை அமைந்துள்ள இடத்தை காலியூர் கோட்டத்தைச் சேர்ந்த ஏரிக் கீழ் நாட்டு பல்லவபுரம் என்று அழைத்து இக்குடைவரையை கல் மண்டபம் என்றும் குறிப்பிடுகிறது. இக்குடைவரையின் தூண்கள், சிற்ப அமைதி மற்றும் கட்டுமான அமைப்பை வைத்து இக்குடைவரை மகேந்திர வர்மனால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருத முடிகிறது. இதே போன்ற அமைப்பையொத்த மற்ற குடைவரைகள் இவ்வூருக்கு அருகிலுள்ள நரசமங் கலம் மற்றும் மாமண்டூரில் காணக்கிடைக்கிறது.

இக்குடைவரை முகமண்டபம், அர்த்த மண்டபம் மற்றும் கருவறையுடன் விளங்குகிறது மொத்தம் ஏழு கருவறைகள் உள்ளன. இக்குடைவரையில் இரண்டு கருவறைகள் முகமண்டபத்தின் பக்கவாட்டிலும், இரண்டு கருவ றைகள் அர்த்த மண்டபத்தின் பக்கவாட்டிலும், மூன்று கருவறைகள் அர்த்த மண்டபத்தின் பின்பக்கதிலும் குடையப்பட்டுள்ளன. எந்தக் கருவறையிலும் இறை உருவங்கள் இல்லை.

தூண்கள் சதுரம், எண்கட்டு, சதுரம் என்று அமைக்கப்பட்டு போதிகைகள் மிக எளிமையாக வளைந்தாற் போல் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு முழுத் தூண்களும், நான்கு அரைத்தூண்களும் உள்ளன. முகமண்டபத்தின் கருவ றைக்குள் செல்வதற்கு ஒரு நிலைப் படிக்கட்டும், அர்த்தமண்டபத்தின் கரு வறைக்கு செல்வதற்கு இரண்டு நிலைப் படிக்கட்டும் அமைக்கப்பட்டுள்ளது. மற்ற மூன்று கருவறைகளுக்கும் இருநிலைப் படிக்கட்டுக்கள் அமைக்கப் பட்டு அவற்றின் முன்னே அசுவபாதம் செதுக்கப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபம் மற்றும் முக மண்டப கருவறைகளுக்கு அதிட்டான உறுப்புகள் எதுவும் காணப்படவில்லை. எனினும் மூலக் கருவறைகளுக்கு ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், கண்டபாதம், பட்டிகை என்று பாதபந்த அதிட்டானமாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறை முன் உள்ள சுவற்றில் உள் புறமாக குடைந்து அரைத் தூண்களாகவும், போதிகை போன்றும் தேவகோட் டமாய் அமைத்து அதனுள்ளே ஆறு வாயில் காப்பாளர்களை அமைத்துள் ளனர். மேலும் உத்திரம், வாஜனம் ஆகியவற்றையும் கபோதம் எந்தவித அலங் காரமும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ளது.

கருவறையின் வாயில்கள் பார்க்க ஒரே மாதிரியாக இருந்தாலும் அதன் உள்ளவுகளில் மாறுபாடு காணப்படுகிறது. மேலும் அவர்களின் நடுவே இறை உருவங்களை நிறுத்துவதற்காக குழியும் உள்ளது.

இக்குடைவரையில் பிற்காலத்திய பிரம்மசாஸ்தா கையில் அக்க மாலை யும், கமண்டலமும் கொண்டு உள்ளார். சண்டேஸ்வரர் மற்றும் தலை இல்லாத பின்னப்பட்ட இடபத்தின் சிலையும் உள்ளது.

இக்குடைவரையில் கருவறைக்கு இரண்டாக மொத்தம் ஆறு வாயிற் காப்போன் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருமே தனித்தனியான காத ணிகள், கழுத்தணிகள், உடை அலங்காரம், முப்புரிநூல் மற்றும் கீழ் ஆடை யில் காட்டப்பட்டுள்ள முடிச்சு, கை அமைதி, நிற்கும் கோலம் ஆகியவை ஒன் றுக்கொன்று மாறுபட்டு உள்ளன. இதில் பாம்புகளைக் கொண்டு முப்புரி நூலும் கையில் வைத்துள்ள தடியில் பாம்பு சுற்றியவாறும் காட்டப்பட்டுள்ளன. இந்த வாயில் காவலர்கள் அனைவரும் அதிஷ்டானத்தில் மேல் உள்ள பட்டி கையின் மேல் நின்றவாறு அமைக்கப்பட்டுள்ளனர்.

## கல்வெட்டு செய்திகள் :

### குடைவரைக் கல்வெட்டுகள் :

தூண்களில் வெட்டப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுகள் கன்னர தேவனின் ஆட்சிக் காலத்தை சார்ந்தவை. குடைவரையின் நடுப்பகுதியில் உள்ள அரைத் தூணில் வெட்டப்பட்டிருக்கும் இருபத்தி நான்காம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (இ.க.ஆ. 295 / 1912) இக்குடைவரை அமைந்துள்ள இடத்தை காலியூர் கோட்டத்தை சேர்ந்த ஏரிக் கீழ் நாட்டு பல்லவபுரம் என்று குறிப்பிட்டு

இக்குடைவரையை கல்மண்டபம் என்றும் இக்குடைவரை இறைவன் கல் மண்டகத்து ஆழ்வார் என்றும் அழைக்கப்பட்டுள்ளதை நமக்கு தெரி விக்கிறது. இறைவன் திருமுன் திருப்பலி கொட்டவும், மூன்று சந்தியும் திரு வமுது செய்யவும் பல்லவபுரத்து ஊரார் அளித்த நிலக்கொடையையும் குறிக் கிறது.

மற்றொரு கல்வெட்டு (இ.க.ஆ. 71 / 1974–75) கோவில் இறைவனுக்கு முப் போதும் திருவமுது செய்ய தரப்பட்ட ஒன்பதரை மா நிலங்களையும் இறை வனை கல் மண்டகத்து திருவடிகள் என்று அழைக்கும் செய்தியையும் சுட்டிக் காட்டுகிறது. கன்னர தேவனின் இருபத்தி ஐந்தாம் ஆட்சியாண்டில் உள்ள கல்வெட்டு ஊர் பெயரையும் கோவில் பெயரையும் சொல்வதுடன் இறை வனுக்கு விளக்கெரிக்க ஆடுகள் கொடையாக தரப்பட்ட செய்தியும் மற்றும் மன்னர் பெயரில்லாமல் இருக்கும் ஒரு கல்வெட்டு ஒன்று இவ்வூரைச் சேர்ந்த வைகானஸன் கண்ணன் பட்டன் என்பவருக்கு ஊரார் நிலக்கொடை அளித்த தகவலை தருகிறது. சிதைந்த நிலையில் உள்ள கல்வெட்டு ஒன்றி னால் பல்லவபுரத்து ஊரார் சிற்றணுக்காவூரை சேர்ந்த ஒருவருக்கு குள மொன்றை விற்பனை செய்த தகவலை அளிக்கிறது.

## கொய்யாமலர் நாதர் கோயில் கல்வெட்டுகள்

குரங்கணில் முட்டம் கொய்யா மலரீசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டொன்று ( இ.க.ஆ.290 / 1912 ) திரிபுவனச் சக்கர வர்த்திக் கோனேரின்மை கொண்டான் 10–ஆம் ஆட்சியாண்டில் காலியூர் கோட்டத்து ஏரிகீழ் நாட்டின் ஒரு பகுதியாகிய மாவண்டூர் பற்று பல்லவபுரம் கிராமத்தில் உள்ள திருக்குரங்கணில் முட்டம் உடைய நாயனார் கோயிலுக்கு நிலம் தானமாக வழங்கப்பட்டது. அந்நிலத்தின் மீது வரிவிதிக்கப்பட்ட தொகை செலுத்தப்பட்டதால் வரிகள் கணக்கிட்டு நிறைவேற்றப்பட்டதாகக் கூறுகிறது.

கருவறையின் வடக்குச் சுவரிலுள்ள மற்றொரு கல்வெட்டு (இ.க.ஆ.291 / 1912) மூன்றாம் குலோத்துங்க சோழனில் 20 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1198) திருக்குரங்கணில் முட்டத்திலுள்ள திருக்குரங்கணில் முட்டமுடைய நாய னார் கோயிலுக்கு சம்புவராயர் ஆணையின் பேரில் காலியூர் கோட்டத்து ஏரி கீழ் நாட்டு சாத்திமங்கலம் என்ற அம்மைநல்லூர் நீறணிந்தான் சேதிராயன் என்பவனால் தானமாக வழங்கப்பட்டது என்று கூறுகிறது.

கருவறையின் தெற்குச் சுவர் கல்வெட்டு (இ.க.ஆ. 292மூ1912) திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் 10 ஆம் ஆட்சியாண்டில் கோயிலைச் சீர்செய்யவும், வழிபாட்டுச் செலவுக்குமாக 5 வேலிநிலம் தான மாக வழங்கப்பட்டது. 25 பொன் வழங்கப்பட்டதால் இந்நிலம் வாடகை இல்லா நிலமானது. அந்நிலத்துக்கு உரிய வேறு வருமானம் கணக்கிடப்பட்டது. நிலத்தின் ஒரு பக்க எல்லையாக “தூசி” என்ற ஊர் குறிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறது.

மண்டபத்தின் மேற்குச் சுவர் கல்வெட்டொன்று (இ.க.ஆ. 293மூ1912) மூன்றாம் குலோத்துங்க சோழனின் 9ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1187) திருக் குரங்கணல் முட்டமுடைய நாயனார் கோயிலில் ஒரு விளக்கெரிக்க பல்லவ புரத்தைச் சேர்நத ஒருவன் காசுகள் தானமாக வழங்கினான் என்று கூறு கிறது.

கோயிலுக்கு முன்னால் உள்ள பலகைக் கல்வெட்டு (இ.க.ஆ. 294/1912) விஜயநகர வீரப்பிதாப கிருஷ்ணதேவ மகாராயர் காலத்தில், சகம் 1451 (கி.பி. 1529) விரோதி ஆண்டு, சிம்ம மாதம் 5 ஆம் நாள் சனிக்கிழமை, உத்திரட் டாதியைக் குறிப்பிட்டு ஏரிகீழ் நாட்டு மாவண்டூர் பற்று திருக்குரங்கணில் முட்டம் கொய்யா மலரீசுவரர் கோயிலுக்கு பூஜா விருத்திக்காக பல்லவபுரம் கிராமம் அரசனின் புண்ணிய காரியமாக தானமாக வழங்கப்பட்டது என்று கூறுகிறது.

குடைவரைக் கோயிலின் ஒரு தூண் கல்வெட்டு (இ.க.ஆ. 295 / 1912), கச்சியும் தஞ்சையும் கொண்ட இராட்டிரகூட கன்னர தேவனின் 24–ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.963) ஏரிகீழ் நாட்டு பல்லவபுரம் க்லமடை காட்டாள்வார் கோயிலுக்கு ஸ்ரீபலி நிகழ்ச்சிக்காக உள்ளூர்க்காரர்களால் நிலம் தானமாக வழங்கப்பட்டது என்று கூறுகிறது.

கொய்யா மலசீசுவரர் என்ற வாலீஸ்வரர் கோயிலின் மகாமண்டப தெற்குச் சுவர் ஜன்னலில் உள்ள கல்வெட்டு (74 / 1974–75) 12 ஆம் நூற்றாண்டு விக்கிரம சோழன் என்று மட்டும் குறிப்பிடுகிறது.

மகாமண்டபத்தின் மேற்குச் சுவர் வெளிப்புறம் உள்ள கல்வெட்டு (இ.க.ஆ. 75 / 1974–75) திருப்புலிவனம் தேவனபட்டர் மகன் பரிசாக உடையவர் விக்கிர கத்தை எழுந்தருள்வித்து மேலை ஏகாம்பரநாதன் பெயரில் ஒரு மடம் அமைக் கப்பட்டது என்று கூறுகிறது.

இக்கல்வெட்டுகள் அனைத்தும் இந்திய தொல்லியல் துறை வெளியிட் டுள்ள தென்னிந்திய கல்வெட்டு மடலம் 36 இல் கல்வெட்டு எண் முதல் வரை வெளியிடப்பட்டுள்ளன.

இக்குடைவரை தற்போது தொல்லியல் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழக கலைவரலாற்றில் பல உன்னதமான புதுமைகளை புகுத்தி தமிழகக் கோயில் கட்டடக் கலைக்கு முன்னோடியாகத் திகழும் பல்லவர் களின் கலைத் திறனுக்கு சான்றாக விளங்குகிறது.

நன்றி : திரு. **பிச்சை பிள்ளை,**
உளுந்தூர்பேட்டை.




## நூலாசிரியரைப் பற்றி...



கல்வியில் கரையிலாத காஞ்சி எனும் அப்பரின் வாக்கிற்கேற்ப, தொண்டை நாடு சான்றோர் உடைத்து எனும் கோயில்களின் நகரமாம் காஞ்சியில் பிறந்தவர் பாபுமனோ. இவர் கணிப்பொறியில் முதுநிலை பட்டம் பெற்று, தற்போது சென்னையில் மென்பொருள் நிபுணராக பணிபுரிகிறார். தமிழ் நாட்டில் கோயில் கட்டடக் கலையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய பல்லவர்களின் கலை தாக்கத்தால் விளைந்த கோயில்களின் அழகில் மயங்கி, அதன் மேல் கொண்ட ஈர்ப்பால் பல்வேறு இடங்களில் அதைத் தேடி சோழ, பாண்டிய, பல்லவ, முத்தரையர் கோயில்களுக்கு பயணப்பட்டு உள்ளார்.

கட்டடக் கலை மற்றும் சிற்பங்கள் பற்றிய நுணுக்கங்களைப் பயின்று, அதை மற்றவர்களுக்கும் உணர்த்தும் வகையில் திருமதி. சௌந்தரி ராஜ்குமார் மற்றும் கோவையை சேர்ந்த டாக்டர். சுரேந்திரன் அவர்களுடன் இணைந்து இணைய வழியில் கோயில் கட்டடக் கலை பற்றிய வகுப்புகளை எடுத்து வருகிறார். இதனைத் தொடர்ந்து காஞ்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பழமையான கோயில்களின் சிறப்பை அனைவருக்கும் சென்றடைய வேண்டிய வகையில் பல்வேறு மரபு நடைகளை நடத்தி வருகிறார். மேலும் காஞ்சிபுரம் மற்றும் சில கோயில்களில் தங்களது குழுவினருடன் இணைந்து உழவாரப்பணி செய்துள்ளார்.



*Printed @ Subam Printers / Tiruvannamlai.*